**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8082845

1. District மாவட்டம் : மதுரை  PS: காவல்நிலையம் : ஊ.த.க பிரிவு  Year: ஆண்டு 2023  FIR No.: மு.த.அ. எண் 11/2023  Date: நாள் 03.11.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended  Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as
(ii) Act சட்டம்: by Prevention of corruption (Amendment) Act 2018.  Sections பிரிவுகள்: amended by prevention of corruption (Amendment
(iii) Act சட்டம்: Crpc.  Sections பிரிவுகள்: Act 2018 and 102 crpc.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 02.11.2023  Date to : நாள் வரை 03.11.2023
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 18.15 hrs.  Time to : நேரம் வரை 00.45 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.11.2023  Time நேரம் 03.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.11.2023  Time நேரம் 04.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : திட்டத்து செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் செல்லம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம், மதுரை மாவட்டம். 28. கி.மீ மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு.M.சிங்காரவேலன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : மலையாண்டி.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட அகம் தணிக்கை அலுவலர்  (g) Address : முகவரி மாவட்ட அகம் தணிக்கை அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) அ.செல்வி, உதவியாளர் சார்பதிவாளர் (பொ), செல்லம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம், மதுரை மாவட்டம் மற்றும் 2) அ.க.ராமச்சந்திரன் s/o கணேசன், சிந்துப்பட்டி, மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதம் இல்லை –

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)

(2)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடபபட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Smt. N. Bharathi Priya Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V.A.C., Madurai ........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..............................................: காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 3.11.2023 | (signature) 03/11/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 03.11.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 05.15hrs.

Name: பெயர் K.KUMARAGURU
Rank: நிலை INSPECTOR OF POLICE, V.A.C, Madurai. No. எண் ....

Hon'ble Sir,

Submitted,

இன்று 03.11.2023-ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு, காவல் ஆய்வாளர் K.குமாரகுரு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திரு.M.சிங்காரவேலன் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம், செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 02.11.2023, மேலும், திடீர் இணை ஆய்வின் போது செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலக உதவியாளர், சார்-பதிவாளர் (பொறுப்பு) திருமதி. A. செல்வி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.90,000/-, சிந்துபட்டியைச் சேர்ந்த கனகராஜ் மகன் திரு.இராமச்சந்திரன் என்ற தனிநபரிடமிருந்து, கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.2,46,200/-, சிக்மா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் சார்பாக செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் I.P. கேமரா ஆப்ரேட்டாராக பணிபுரிந்து வரும் திரு.வேல்முருகன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.2,000/- ஆக மொத்தம் பணம் ரூ.3,38,200/-, மேற்படி அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட 15 ஆவணங்கள் மற்றும் சம்பவ இடத்தில் அளித்த மூன்று வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.M.சிங்காரவேலன், ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 14441/2023/ஐ1, நாள் : 03.11.2023 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பதிவுத் துறை - மதுரை தெற்கு, செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.3,38,200/- பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக.

02.11.2023-ம் தேதியன்று, மதுரை மாவட்டம், செல்லம்பட்டியில் மதுரை-தேனி மெயின்ரோட்டில் செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், நானும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு.K.குமாரகுரு, திருமதி.T.சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் இணைந்து 02.11.2023 -ஆம் தேதி மாலை 17.00 மணி முதல் செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தை தொடர்ந்து கண்காணித்தபோது மேற்குறிப்பிட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய வந்தவர்கள் அரசு கட்டணம் நீங்கலாக சார்-பதிவாளர் பொறுப்பில் பணியாற்றும் திருமதி. செல்வி என்பவர் பத்திர எழுத்தர்கள் மூலமாக தங்களிடம் கூடுதல் தொகை வசூல் செய்து வைத்துள்ளதாக தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து அந்த அலுவலகத்தை கண்காணித்து மாலை 18.00 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி மதுரை செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகம் நோக்கிச் சென்ற போது, கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன், அலுவலகக் கதவைப் பூட்டி வெளியில் செல்வதற்கு தயாராக இருந்த பெண் நபரிடம் காவல் ஆய்வாளர் தன்னையும், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய என்னையும், காவல் ஆய்வாளராகிய திருமதி.சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அறிமுகம் செய்த பின்னர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து மேற்படி பெண்ணான பின்னால் பெயர், பதவி விபரம் கேட்டு தெரிந்த திருமதி.செல்வி, உதவியாளர், சார்-பதிவாளர் பொறுப்பு, செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகம் அவர்களிடம் விவரம் தெரிவிக்கப்பட்டது. பின்னர், அவரை அழைத்துக்கொண்டு அனைவரும் மேற்படி சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே வந்து திருமதி.செல்வி அவர்களை விசாரித்தபோது, தான் மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றுவதாகவும், கடந்த 05.10.2023-ஆம் தேதி முதல் சார்-பதிவாளர் (பொறுப்பு) அலுவல் கவனித்து வருவதாகவும், மற்ற அலுவலர்கள் அனைவரும் வீட்டுக்குச் சென்று விட்டதாகவும் திருமதி. செல்வி கூறினார். மேலும் அவர் ஆஜர் செய்த தனிநபர் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் திருமதி.செல்வி தனது சொந்தபணம் ரூ.247/-ம், திரு.வேல்முருகன் ரூ.650/-ம் திரு. செந்தில்குமரன் ரூ.490/-ம் திருமதி.கண்மணி ரூ.420/-ம் வைத்திருந்ததாகவும்

எழுதப்பட்டிருந்தது. பின்னர் திருமதி. செல்வி அவர்களை காவல் ஆய்வாளர் திருமதி.சூரியகலா அவர்கள் சோதனை செய்த போது திருமதி.செல்வி வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் இரண்டு பணக் கத்தைகளும், சில ஆவணங்களும், அத்துடன் ஒரு வெள்ளை தாளில் கருப்பு மையினால் கணக்கு எழுதப்பட்ட சிறிய துண்டு காகிதமும் இருந்தது. அந்த துண்டுக் காகிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "2/11, 1) Alex - 7செ-1 3539/2023 கோவி. 363/6B2, 2) கருணாகரன் - அனுபந்தம் -1 2 செ-1, 3) நடே 3 செ-1, 4) மு.பா - 4 செ-1 4.16 -1 4 செ-1 5 செ.1 (4), 5) செல்ல - 9 செ -1 ". மேற்படி பணத்தையும், அதிலிருந்து மேற்குறிப்பிட்ட வெள்ளை பேப்பரையும் எடுத்து திருமதி. செல்வி ஆய்வுக்குழு ஆய்வாளராகிய என்னிடம் ஆஜர் செய்தார். அவரிடம் மேற்குறிப்பிட்ட குறிப்புகளை யார் எழுதியது என்று கேட்ட போது அவற்றை தானே கைப்பட எழுதியதாக திருமதி. செல்வி தெரிவித்தார். மேலும், திருமதி. செல்வி ஆஜர் செய்த பணத்தை நான் வாங்கி எண்ணி பார்த்தபோது அதில் ஒரு கத்தையில் ரூ.50,000/- (ரூ.500 x 100 எண்ணிக்கை) இருந்தது. மேலும், மற்றொரு கத்தையாக இருந்த பணத்தை எண்ணி பார்த்தபோது அதில் ரூ.40,000/- (ரூ.500 x 80) இருந்தது. மேற்படி பண கத்தைகள் குறித்து திருமதி.செல்வி அவர்களிடம் விசாரித்தபோது மேற்படி மொத்தப்பணம் ரூ.90,000/-, 02.11.2023 -ஆம் தேதி திரு. செல்லமணி என்ற பத்திர எழுத்தர் அங்கீகாரம் இல்லாத 9 சென்ட் மனை இடத்தை பத்திரம் பதிவு செய்ததற்கு ஒரு சென்ட்டிற்கு ரூ.10,000/- வீதம் கொடுத்த கமிஷன் பணம் என்று கூறியதன் பேரில், நான் அந்தப் பணத்தைக் கைப்பற்றினேன். மேலும் திருமதி. செல்வி பர்ஸில் வைத்திருந்த ரூ.70/-ம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட காகிதத்தில் காணப்படும் குறிப்புகள் குறித்து திருமதி. செல்வி அவர்களிடம் விசாரித்த போது, அலெக்ஸ் என்ற பத்திர எழுத்தர் 02.11.2023 -ஆம் தேதி 7 சென்ட் இடத்தை பதிவு செய்துள்ளதாகவும், திரு.கருணாகரன் என்ற பத்திர எழுத்தர் 2 சென்ட் இடத்தை பதிவு செய்துள்ளதாகவும், திரு.நடேசன் என்ற பத்திர எழுத்தர் 3 சென்ட் இடத்தை பதிவு செய்துள்ளதாகவும், திரு.முத்துப்பாண்டி என்ற பத்திர எழுத்தர் 17 சென்ட் இடத்தை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் திரு. முத்துபாண்டி பதிவு செய்த 17 சென்ட் இடத்திற்கு ஒரு சென்ட்டுக்கு ரூ.10,000/- வீதம் ரூ.1,70,000/- தன்னிடம் கொடுத்ததாகவும், தான் அப்பணத்தை பத்திர எழுத்தர்

திரு.இராமச்சந்திரனிடம் கொடுக்கச் சொன்னதாகவும் தெரிவித்தார். மேலும், திரு.ராஜா என்ற பத்திர எழுத்தர் தன்னிடம் கொடுத்த ரூ.73,000/-த்தையும், மதுரையைச் சேர்ந்த பெண் ஈடு அடமானம் செய்வதற்கு கொடுத்த ரூ.700/-ரும், கலையரசி என்ற பத்திர எழுத்தர் இரண்டு DOT பதிவு செய்வதற்கு கொடுத்த ரூ.2,500/- ஆகியவற்றையும் திரு.ராமச்சந்திரனிடம் கொடுக்கச் சொன்னதாகவும், அதன்படி இன்று வசூலான மொத்தத் தொகை ரூ2,46,200/-ஐ அவரிடமிருந்து பெறுவதற்காக தான் வெளியில் நின்று கொண்டிருந்த போது திடீர் இணை ஆய்வு குழுவினர் வந்து விட்டதாகவும் தன்னை உள்ளே அழைத்து வந்து விட்டதாகவும் திருமதி.செல்வி தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து திருமதி. செல்வி அவர்கள் தெரிவித்த அடையாளத்தின் பேரில் மதுரை-தேனி ரோட்டில் சார்-பதிவாளர் அலுவலகத்திலிருந்து சுமார் 100 மீட்டர் கிழக்கே உள்ள பரமன் காம்ப்ளக்ஸ் என்ற கட்டிடத்தில் உள்ள ஒரு கடையில் பத்திரம் எழுதும் அலுவலகம் இருந்தது. அந்தக் கடையில் இருந்த இரண்டு நபர்களை விசாரித்தபோது அவர்களில் ஒருவர் பெயர் திரு.இராமச்சந்திரன் வயது 33/2023, த/பெ. கனகராஜ் என்றும், தான் சிந்துபட்டியில் குடியிருப்பதாகவும், தான் உரிமம் பெறாமல் பத்திர எழுத்தர் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், திருமதி. செல்வி அவர்களுக்கு உதவியாக இருந்து, அவர் சொல்லும் வேலைகளை செய்து வருவதாகவும், சில நேரங்களில் தனது காரில் அழைத்து சென்று, அவரது உசிலம்பட்டி வீட்டில் விட்டு வருவதாகவும் தெரிவித்தார். மற்றொருவரிடம் விசாரித்த போது அவரது பெயர் திரு.வேல்முருகன் வயது 31/2023, த/பெ. மகேந்திரன் என்றும் தான் எண். 8/40, தலையாரி தெரு, எழுமலை என்ற முகவரியில் குடியிருப்பதாகவும், தான் சிக்மா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் சார்பாக செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் I.P. கேமரா ஆப்ரேட்டாராக பணியாற்றுவதாகவும் கூறினார்கள். தொடர்ந்து, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் திரு.இராமச்சந்திரனை விசாரித்த போது, அவர் தனது சட்டைப்பையில் வைத்திருந்த ஒரு பேப்பரை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு பக்கம் தட்டச்சு செய்யப்பட்டு, ஆவண எண் 3037 என முத்திரையிடப்பட்டிருந்தது. அந்த வெள்ளைநிற தாளின் பின்பக்கம் கருப்பு மையால் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "02.11, ராஜா - 73,000-, மு.பாண்டி - 1,70,000-, ஈடு அடமானம் - 700-, கலையரசி - 2500-" மேற்குறிப்பிட்ட குறிப்புகள் குறித்து, திரு.இராமசந்திரனிடம் விசாரித்த போது, இன்று பதிவான

பத்திரங்களுக்கு உரிய கமிஷன் தொகையை கொடுத்தவர்களின் விபரங்களை தான் காகிதத்தில் குறிப்பாக எழுதி வைத்திருந்ததாக கூறினார். அதில் திரு. ராஜா என்ற பத்திர எழுத்தர் அவரிடம் பணியாற்றும் திரு. மகேஷ்வரன் என்பவர் மூலம் ரூ.73,000/- பணம் கொடுத்து, அதனை திருமதி. செல்வி அவர்களிடம் கொடுக்கச் சொன்னதாகவும், அவர் என்ன பதிவுக்காக அந்த பணத்தை கொடுத்தார் என்பது தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். மேலும், திரு. முத்துபாண்டி என்ற பத்திர எழுத்தர் 02.11.2023 -ஆம் தேதி பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்த 17 சென்ட் இடத்திற்கு ஒரு சென்ட்டுக்கு ரூ.10,000/- வீதம் ரூ.1,70,000/- கொடுத்து அதனை திருமதி. செல்வி அவர்களிடம் கொடுக்கச் சொன்னதன் பேரில் அதனை வாங்கி வைத்திருந்ததாகவும், மதுரையை சேர்ந்த ஒரு பெண் ஈடு அடமானத்திற்கு ரூ.700/-ரும், கலையரசி என்பவர் இரண்டு DOT பதிவிற்கு ரூ.2,500/-ரும் கொடுத்து அதனை திருமதி. செல்வி அவர்கள் தன்னிடம் கொடுத்து வைக்கச் சொன்னதாக சொல்லி கொடுத்ததை தான் வாங்கி தனது கைப்பட குறிப்பு எழுதி வைத்திருந்தாகவும் தெரிவித்தார். ஆக மொத்தம் அந்த காகிதத்தில் மொத்தம் ரூ.2,46,200/-க்கு கணக்கு எழுதப்பட்டிருந்தது. தொடர்ந்து, திரு.ராமச்சந்திரனிடம் விசாரித்த போது, மேற்குறிப்பிட்ட ரூ.2,46,200/-ஐ திருமதி. செல்வி அவர்களுக்கு கொடுப்பதற்கு தான் 02.11.2023 -ஆம் தேதி பெற்று வைத்திருப்பதாக கூறி, தான் அமர்ந்திருந்த இருக்கையின் முன்பிருந்த மேசை டிராயரை திறந்து பணக்கத்தையை எடுத்துக் காண்பித்தார். மேலும், திரு.ராமச்சந்திரன் அருகில் இருந்த திரு.வேல்முருகனிடம் விசாரித்த போது, 02.11.2023 ஆம் தேதி செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் தான் பணியிலிருந்த போது மதியம் சுமார் 2 மணியளவில் சார் பதிவாளர் திருமதி. செல்வி அவர்கள் தன்னிடம் ரூ.2,000/- கொடுத்து அதனை மறுநாள் மதுரை மாவட்ட பதிவாளர் அலுவலகத்துக்கு சென்று ஹாலோகிராம் ஸ்டிக்கர் வாங்கி வரச்சொன்னதாகவும், அந்தப் பணத்துடன் தனது சொந்தப் பணம் ரூ.350/-ஐயும் சேர்த்து வைத்திருந்ததாகவும் கூறி ரூ.2,350/-ஐ எடுத்துக் காண்பித்தார். தொடர்ந்து, திரு.ராமச்சந்திரன் மற்றும் திரு.வேல்முருகன் ஆகிய இருவரும் ஆஜர் செய்த மேற்குறிப்பிட்ட மொத்தப் பணம் மற்றும் குறிப்பு எழுதி வைத்திருந்த காகிதங்களுடன் அவர்கள் இருவரையும் சார் பதிவாளர் [illegible]

தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், திருமதி. செல்வி ஆஜர் செய்த லஞ்சப்பணம் ரூ.90,000/-, திரு.ராமச்சந்திரன் ஆஜர் செய்த லஞ்சப் பணம் ரூ.2,46,200/-, திரு.வேல்முருகன் வைத்திருந்த சந்தேகத்திற்குரிய பணம் ரூ.2,000/- ஆக மொத்தம் ரூ.3,38,200/-யை நான் கைப்பற்றினேன். திரு.வேல்முருகனிடமிருந்த பெறப்பட்ட பணம் ரூ.350/- சொந்தபணம் என்பதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், திருமதி. செல்வி எழுதி வைத்திருந்த குறிப்பு சீட்டும், திரு.இராமச்சந்திரன் எழுதி வைத்திருந்த குறிப்புச் சீட்டும் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் சார்-பதிவாளர் இருக்கையில் இருந்த திரு.செந்தில்குமரன் கைப்பட எழுதிய 02.11.2023 ஆம் தேதி பதிவான ஆவண எண்கள் அடங்கிய குறிப்புத்தாளும் கைப்பற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட லஞ்சப்பணம் தவிர பத்திர பதிவிற்கு அரசு கணக்கில் செலுத்தவேண்டிய தொகை ஏதும் கையிருப்பில் இல்லை என திருமதி. செல்வி தெரிவித்தார். மேலும் பொதுமக்களின் பத்திர பதிவிற்கு என்று பணமாக அலுவலகத்தில் பெறக்கூடாது. பதிவிற்கான பணங்கள் ஆன்லைன் மூலமாக செலுத்த வேண்டும் என தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, மேல் விசாரணைக்காக செல்லம்பட்டி, சார்-பதிவாளர் அலுவலக உதவியாளர், சார்-பதிவாளர் பொறுப்பு வகித்த திருமதி. செல்வி அவர்கள் ஆஜர் செய்த 1) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு - பக்கம் 1 முதல் 13 வரை உள்ளதில் 11 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது, 2)செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பணம் இருப்பு பதிவேடு - பக்கம் 1 முதல் 25 வரை எழுதப்பட்டுள்ளது, 3) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக குறுந்தகடு வழங்கும் பதிவேடு - பக்கம் 1 முதல் 33 வரை எழுதப்பட்டுள்ளது, 4) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக ஆவணம் வழங்கும் பதிவேடு - 3-ம் பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது, 5) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக ரேகைப் பதிவேடு - பக்கம் 1 முதல் 63 வரை எழுதப்பட்டுள்ளது, 6) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக இயக்கப் பதிவேடு - 2 பக்கங்கள் மட்டும் எழுதப்பட்டுள்ளது, 7) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு பதிவேடு - 2 பக்கங்கள் மட்டும் எழுதப்பட்டுள்ளது, 8) IPCO வருகை பதிவேடு - பக்கம் 1 முதல் 11 வரை எழுதப்பட்டுள்ளது, 9) DEO வருகை பதிவேடு - பக்கம் 1 முதல் 17 வரை எழுதப்படாமல் உள்ளது, 10) செல்லம்பட்டி சார் பதிவாளர் அலுவலக தாமத வருகைப் பதிவேடு - 9 பக்கங்கள் மட்டும் எழுதப்பட்டுள்ளது, 11) Computer Printout of Chellampatti Sub-

Registrar Office, dated 02.11.2023 (Pages 1 to 10), 12) உதவியாளர், சார்பதிவாளர் பொறுப்பு வகித்த திருமதி.செல்வி எழுதிய சீட்டு. 13) மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு.செந்தில்குமரன் என்பவரது மேஜையிலிருந்த கருப்பு மையினால் எழுதப்பட்ட தாள் 14) சிந்துப்பட்டியைச் சேர்ந்த கனகராஜ் மகன் திரு.ராமச்சந்திரன் கருப்பு மையினால் எழுதப்பட்ட தாள், 15) திருமதி. செல்வி லஞ்சப்பணம் ரூ.90,000/-த்தை வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பை (ஒரு பக்கம் " V.S.A. சீனியப்ப நாடார் சன்" என்றும், மறுபக்கம் "சிவமீனாள்" என்றும் பச்சை மையில் அச்சடிக்கப்பட்டது) ஆகிய ஆவணங்களை நான் கைப்பற்றினேன். மேற்படி பணம் ரூ.3,38,200/-, மேற்படி 15 ஆவணங்கள் மற்றும் திருமதி.செல்வி, உதவியாளர், சார்-பதிவாளர் பொறுப்பு, செல்லம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம், மதுரை மாவட்டம், மேற்படி அலுவலகத்தில் ஐ.பி. கேமரா ஆப்பரேட்டராக பணிபுரியும் திரு.வேல்முருகன் மற்றும் திரு.இராமச்சந்திரன், த/பெ. கனகராஜ், சிந்துபட்டி ஆகியோர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து திருமதி.செல்வி, உதவியாளர், சார்-பதிவாளர் பொறுப்பு, செல்லம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம், மதுரை மாவட்டம் மற்றும் திரு.இராமச்சந்திரன், த/பெ. கனகராஜ், சிந்துபட்டி ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம்/- XXXXX 03/11/2023, (M.சிங்காரவேலன்), ஆய்வுக்குழு ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 02.11.2023. 2)கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.3,38,200/-. 3) திருமதி. செல்வி லஞ்சப்பணம் ரூ.90,000/-த்தை வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பை (ஒரு பக்கம் " V.S.A. சீனியப்ப நாடார் சன்" என்றும், மறுபக்கம் "சிவமீனாள்" என்றும் பச்சை மையில் அச்சடிக்கப்பட்டது). 4) செல்லம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 14 ஆவணங்கள். 5) மூன்று அலுவலர்களின் வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (03.11.2023) at 03.30 hrs along with Joint Surprise Check Proceedings, Dated:02.11.2023, Cash Rs.3,38,200/-, Three statements, Seized 15 documents. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime

No.11/2023 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. on 03.11.2023 at 04.15 hrs. Sd/-XXXXX (K.Kumaraguru), Inspector of Police, V&AC, Madurai. 03.11.2023.

The original FIR along with report of Tr.M.Singaravelan, Joint Surprise Check Proceedings Dated: 02.11.2023 and 3 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

3/11/2023

INSPECTOR OF POLICE
Vigilance Anti Corruption
MADURAI